தமிழ்மணம்
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies
E-ISSN: 3049-0723 & P-ISSN: 3107-7781
Volume 7, Number 01, January 2026

# Kodaikanal Vilpatti Vetri Velappar Temple: History and Art

**Dr. P. Sheela*,**
*Professor, Department of Sculpture, Tamil University, Thanjavur – 613 010.*
*Cell: 9750251588, Email: sheelaudai1970@gmail.com*
**Dr. R. Udayachandran**,**
*Associate Professor and Head of Department, Bharathiar University,*
*Coimbatore – 641 046. Cell: 9443798705, Email: sheelaudaiachandran@gmail.com,*

***Corresponding Author** Email: sheelaudai1970@gmail.com

**ARTICLE INFO**
*Article history:*
Received
December 29, 2025
Revised
December 30, 2025
Accepted
December 30, 2025
Published
December 01, 2026

**ABSTRACT**

Vilpatti is a major panchayat located within the Kodaikanal Taluk of Dindigul District, Tamil Nadu. Megalithic burial monuments are found in many villages across this region. This mountainous area was once inhabited by the Porunar and Vedars, the petty chieftains of the Sangam era. Although it fell under the rule of various empires that governed Tamil Nadu, the region gained prominence during the Madurai Nayak period. Prior to the arrival of the British, Kodaikanal city was part of the Vilpatti territory; it became a world-renowned tourist destination only after the British chose it as a summer retreat.

The name Vilpatti is derived from its history as a settlement for the Vedars (hunters), the indigenous people of the Kurinji (mountainous) landscape. In this village, a temple dedicated to Lord Murugan, known as Vetri Velappar, is situated atop a rock. Dating back to the 18th century, the temple faces west and consists of a single prakara (circumambulatory path) encompassing the garbhagriha (sanctum sanctorum), idainazhigai (vestibule), ardha mandapa, maha mandapa, muna mandapa, a Shiva shrine, and a navagraha mandapa.

The primary deities and sculptures include Baladandayuthapani, Vinayaka, Munivar, Shiva, and the Lingam. The friezes on the kodungai (eaves) feature rows of sculptures depicting warriors, elephants, horses, lions, dancers, peacocks, turtles, yali, and a pregnant woman. Within the Shiva shrine, diverse sculptures such as the Lingam, Kadamban, Idumban, Durga, Vinayaka, the mythical Ganda Bherunda bird, erotica, and Purushamriga (sphinx-like figure) are found.

The temple performs three-time daily puja rituals, and a Maha Kumbhabhishekam (consecration) was held in 2014. The temple owns lands in Vilpatti and Periyakulam and is currently administered by the Palani Devasthanam. It can be concluded that this temple originated within the Nayak art tradition, which represents the final phase of Tamil Nadu's classical artistic heritage.

**Key words**: *Kodaikanal, Vilpatti, Vetri Velappar, Madurai Nayaks, Ganda Bherunda bird, Erotica.*

Journal Homepage: https://tamilmanam.in/journal/
This is an open access article under the License Creative Commons Attribution 4.0 International License
http://Creativecommons.org//license/by/4.0/

# கொடைக்கானல் வில்பட்டி வெற்றி வேலப்பர் கோயில் வரலாறு மற்றும் கலை

***முனைவர் பா. ஷீலா**

பேராசிரியர், சிற்பத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் – 613 010.

****முனைவர் இரா. உதயசந்திரன்**

இணைப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர், பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் – 641 046.

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ்நாட்டு திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டத்திற்குட்பட்ட ஊராட்சிகளுள் வில்பட்டி என்னும் ஊராட்சி பெரிய அளவிலான ஊராட்சி ஆகும். இங்கு பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் பல ஊர்களில் காணப்படுகின்றன. இது சங்க கால குறுநில மன்னர்களான பொருநர் மற்றும் வேடர்கள் வாழ்ந்த மலைப்பகுதி ஆகும். தமிழ்நாட்டை ஆட்சிபுரிந்த பல பேரரசுகளுக்குட்பட்ட பகுதியாயினும் மதுரை நாயக்கர் காலத்தில் சிறப்பெய்தியுள்ளது. ஆங்கிலேயர் வருகைக்கு முன்னர் கொடைக்கானல் நகரம் வில்பட்டிக்குட்பட்ட பகுதியாக இருந்தது. கொடைக்கானல் ஆங்கிலேயர் விரும்பி தங்குமிடமாக மாறிய பின் உலக உல்லாச நகரமானது. குறிஞ்சி நில மக்களான வேடர்கள் வாழ்ந்த பகுதியாதலால் வில்பட்டி என அழைக்கப்படுகிறது. இவ்வூரில் பாறையின்மீது முருகருக்கு வெற்றி வேலப்பர் என்னும் பெயரில் கோயில் உள்ளது. இக்கோயில் பதினெட்டாம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். ஒரேயொரு பிரகாரத்தைக் கொண்டு இக்கோயில் கருவறை, இடைநாழிகை, அர்த்த மண்டபம், மகா மண்டபம், முன் மண்படம், சிவன் சன்னதி, நவகிரக மண்டபம் ஆகியவற்றுடன் மேற்கு திசை நோக்கி அமைந்துள்ளது. மூலவர் பாலதண்டாயுதபாணி, விநாயகர், முனிவர், சிவன், இலிங்கம் ஆகிய சிற்பங்கள் அமைந்துள்ளன. கொடுங்கை மீதுள்ள வர்க்கப் பகுதியில் வீரர்கள், யானை, குதிரை, சிம்மம், நடனக் கலைஞர்கள், மயில், ஆமை, மாளி, கர்ப்பிணிப் பெண் ஆகிய சிற்ப அணி வரிசைகள் இடம் பெற்றுள்ளன. சிவன் சன்னதியில் இலிங்கம், கடம்பன், இடும்பன், துர்க்கை, விநாயகர், கண்ட பேரண்ட பறவை, சிற்றின்ப சிற்பங்கள், புருஷாமிருகம் போன்ற பல தரப்பட்ட சிற்பங்கள் காணப்படுகின்றன. இக்கோயிலில் மூன்று கால பூசைகள் நடைபெறுகின்றன. 2014ஆம் ஆண்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. இக்கோயிலுக்குரிய நிலங்கள் வில்பட்டி, பெரியகுளத்தில் உள்ளன. இக்கோயில் பழநி தேவஸ்தானம் நிர்வாகத்திற்குட்பட்ட கோயிலாகும். தமிழ்நாட்டு கலை மரபின் இறுதிக்காலமான நாயக்கர் கால கலை மரபில் இக்கோயில் தோற்றம் பெற்றுள்ளது எனலாம்.

**முக்கிய வார்த்தைகள்**

கொடைக்கானல், வில்பட்டி, வெற்றி வேலப்பர், மதுரை நாயக்கர், கண்ட பேரண்ட பறவை, சிற்றின்பச் சிற்பங்கள்.

**முன்னுரை**

கோயில் என்பது சமய வழிபாட்டில் இன்றியமையாதது. ‘கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்’ என்றும் பழமொழிக்கேற்ப ஊர்தோறும் கோயில்கள் காணப்படுகின்றன. கோயில்களைத் தவிர்த்துவிட்டு இடைக்கால தமிழ்நாட்டு வரலாற்றை எழுத முடியாது. அக்கால வரலாற்றை அறிய உதவும் பெரும்பாலான சான்றுகள் கோயில்களிலேயே இடம்பெற்றுள்ளன. கோயில்கள் அவை சார்ந்த சமூகத்தின் மையமாகத் திகழ்ந்துள்ளன. அவை வழிபாட்டுத் தலங்களாக மட்டுமின்றி கல்விச்சாலை, ஆவணக்காப்பகம், கலைக்கூடம், நூலகம், கருவூலம், மருத்துவமனை, வேலைவாய்ப்பு அலுவலகம், வங்கி, வணிகத்தலம், அவைக்களம் எனப் பன்முகத் தலமாகச் செயல்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் ஆயிரக்கணக்கான கோயில்கள் இன்றும் சிறப்புடன் இயங்கி வருகின்றன. அவற்றுள் சில கோயில்களில்

Tamilmanam

வழிபாடுகள் நடைபெற்று வந்தாலும் அவற்றின் வரலாறு மற்றும் கலைத் தரவுகளின் அடிப்படையில் அறிவியல் கண்ணோட்டத்துடன் ஆராயப்படாமலேயே உள்ளது. அவற்றின் வரலாற்று முக்கியத்துவம் மற்றும் கலைச்சிறப்பை உலகறியச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் கொடைக்கானல் மலையில் வில்பட்டி வேலப்பர் கோயில் இக்கட்டுரையின் ஆய்வுக்களமாக எடுத்தாளப்பட்டுள்ளது.

**கொடைக்கானல்**

தமிழ்நாட்டில் திண்டுக்கல் மாவட்டத்தில் கொடைக்கானல் வட்டத்தின் தலைமை இடமாக கொடைக்கானல் விளங்குகிறது.[1] 'மலைகளின் இளவரசி' என்று அழைக்கப்படும் கொடைக்கானல் சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு வருட வரலாற்றைத் தன்னகத்தே கொண்ட சுற்றுலாத் தலமாகும். இவ்வூர் பெருங்கற்காலம் (Megalithic Age) முதற்கொண்டே மக்கள் வாழ்ந்ததற்கான பல்வேறு தொல்லியல்[2] மற்றும் இலக்கியச் சான்றுகள்[3] கிடைத்துள்ளன.

கொங்கு நாட்டின் தென்பகுதியிலும், பாண்டிய நாட்டின் வடமேற்குப் பகுதியிலும் சிறப்புற்று விளங்குவது பழநி மலையாகும். அப்பழநிமலை சங்க காலத்தில் 'கோடைமலை' என்று பெயர் பெற்றிருந்தது. தற்காலத்தில் அதைக் கொடைக்கானல் என்பர்.[4]

சங்க காலத்தில் கோடைமலை பொருநர் என்னும் குறுநில மன்னர்களால் ஆளப்பட்டது. அவர்களது தலைநகரம் கடியம் எனப்படும். கோடைப்பொருநன் நெடுவேட்டுவன் மற்றும் கோடைப் பொருநன் பண்ணி என்பவர் குறிப்பிடத்தகுந்த மன்னர்களாவர்.[5] இவர்களின் பெயராலேயே இவர்கள் ஆண்ட மலை பொருநன்மலை என அழைக்கப்பட்டு, தற்போது பெருமாள்மலை என அழைக்கப்படுகிறது. அவர்கள் வீரம் மிகுந்த தொன்மையான மறவர் இன மக்களாவர். அவர்கள் வேட்டுவர்கள் என்னும் பொதுப்பெயரால் அழைக்கப்படுவர். அவர்கள் தமிழகத்தின் அரசியலில் பேராற்றல் வாய்ந்த அரசியல் சக்திகளாகவும் கொடை வள்ளல்களாகவும் புகழப்பெற்றுள்ளன.[6] இவர்களது தலைநகரான கடியம்பட்டணம் கோடைமலைக்கு அடியிலுள்ளது. இவ்வூர் பிற்காலத்தில் 'நன்னியார்' என்னும் சான்றோர் வாழ்வதற்கு இடமாயிற்று. அச்சான்றோர் 'கடியநன்னியார்' எனப்படுவர். அவர் எழுதிய செய்யுள் இலக்கணத்தைப் பேராசிரியரும் யாப்பருங்கல விருத்தியுரைகாரரும் மேற்கொள்கின்றனர்.[7]

கோடைமலை சங்க காலத்திற்குப் பிறகு முற்காலப் பாண்டியர், சோழர், பிற்காலப் பாண்டியர் ஆட்சியில் இருந்துள்ளது. இம்மலையின் மேல்பகுதி கொங்குச் சேரர் வசம் இருந்துள்ளது. வந்தரவு வரை திருவாங்கூர் (திருவிதாங்கூர்) எல்லைக்குட்பட்டதாக இருந்தது.

விசயநகர—நாயக்க மன்னர்களின் ஆட்சியும் இம்மலையில் இருந்துள்ளது.[9] இறுதியில் ஆங்கிலேயர் ஆட்சிக்குட்பட்டு அவர்கள் விரும்பிக் கோடையில் வந்து தங்கும் இடமாக மாறியது. சுதந்திரத்திற்குப் பிறகு கொடைக்கானல் புகழ்பெற்ற சர்வதேச சுற்றுலாத் தலமாகியது.[10]

**வில்பட்டி**

பழம் பெரும் வரலாற்றுச் சிறப்பைக் கொண்ட கொடைக்கானலில் வடக்கே சுமார் 9 கி.மீ. தொலைவில் பெருமாள் மலையின் கீழ்ப்பகுதியில் வில்பட்டி என்னும் அழகிய ஊர் அமைந்துள்ளது.[11] இவ்வூரின் இயற்கையமைப்பும் சூழலும் காண்பவர் மனதைக் கொள்ளை கொள்ளும். மலைகளைத் தழுவி நிற்கும் மேகக் கூட்டங்கள் குறிஞ்சி நிலத்திற்கான உரிப்பொருள் தலைவனும் தலைவியும் தனிமையில் ஒருவரை ஒருவர் கூடி மகிழும் நிலையை (புணர்தலும் புணர்தல் நிமித்தமும்)[12] நினைவுபடுத்துகிறது. பள்ளத்தாக்குப் பகுதியில் படிக்கட்டு அமைப்பிலான விவசாயம், சூரிய உதயம், சூரிய அஸ்தமனம், இரவில் ஒளிவீசும் நிலா வெளிச்சம் ஆகியவை கடந்து செல்பவர்களை வியந்து நிற்க வைக்கும்.

வில்பட்டி திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் தாலுக்காவிற்குட்பட்ட ஊராட்சியாகும். இது தமிழ்நாட்டிலுள்ள ஊராட்சிகளில் மிகப்பெரிய ஊராட்சியாகும். இவ்வூராட்சியில் அரியக்கால், அட்டுவம்பட்டி, கோவில்பட்டி, பள்ளங்கி, பெரிய ஓடை, பேத்துப்பாறை, உப்புப்பாறைமேடு, பாரதி அண்ணா நகர், குறிஞ்சி நகர் ஆகிய கிராமங்கள் உள்ளன. இவ்வூராட்சியின் முக்கியத் தொழில் விவசாயமாகும். இங்கு வாழை, கேரட், பீன்ஸ், உருளைக்கிழங்கு, முட்டைகோஸ், காப்பி ஆகியவை பயிரிடப்படுகின்றன.

ஆரம்பத்தில் வேட்டையாடித் தொழில் நடத்திய வேட்டுவர்கள் வாழ்ந்தமையால் வேடப்பட்டி என்று அழைக்கப்பட்டது. பதினெட்டாம் நூற்றாண்டில் தமிழில் பல புராணங்கள் சமஸ்கிருத புராணங்களை அடியொற்றி எழுதப்பட்டன. புராணக் கதைகளுடன் இணைத்து ஊர்ப்பெயர்களும் மாறின. இராமாயணக் கதாநாயகனான இராமபிரான் வில்லால் எய்த அம்பு பட்டு தோன்றிய ஊர் என்பதால் வேடப்பட்டி வில்பட்டி என்று அழைக்கப்பட்டது.

வில்பட்டி என்னும் ஊர்ப்பெயரில் வில் என்றால் அம்பு எய்தற்குரிய கருவி. பட்டி என்றால் மேய்த்தல் நிலம். கைகளில் வில்லையேந்தி வேட்டையாடும் வேட்டுவர்கள் (குறிஞ்சி நிலத்திற்குரிய மக்கள்) வாழ்ந்த பகுதியாதலால் வில்பட்டி என அழைக்கப்பட்டிருக்க வேண்டும். கொடைக்கானல் நகரம் ஆங்கிலேயர் காலத்தில் உருவாவதற்கு முன்பு இதனருகே அமைந்த வேடப்பட்டி என்று அழைக்கப்பட்ட வில்பட்டி என்ற ஊரைச் சார்ந்ததாக இருந்தது.

**கோயில் வரலாறு**

வில்பட்டி ஊரின் நடுவே ஒரு பாறையின்மீது வெற்றி வேலப்பர் கோயில் அமைந்துள்ளது. ஆரம்பத்தில் வேட்டையாடித் தொழில் நடத்திய வேட்டுவர்கள் நாளடைவில் மலைகளைப் படிப்படியாக வெட்டி படிக்கட்டு விவசாயம் செய்யத் தொடங்கினர். விவசாயத்தைக் காக்க வேண்டி குறிஞ்சி நிலக் கடவுளான முருகருக்குக் கோயில் எழுப்பி இறைவனுக்கு வெட்டியப்பர் எனப் பெயரிட்டு அழைத்தனர். அப்பெயரே வட்டிலப்பர் என மாறி, தற்போது வெற்றி வேலப்பர் என அழைக்கப்படுகிறார். இக்கோயில் வேடியப்பன் கோயில், வெட்டியப்பன் கோயில், வெற்றி வேலப்பர் கோயில், சுப்பிரமணியர் கோயில், பாறை வேலப்பர் கோயில் எனக் காலந்தோறும் பெயர் மாறி வந்துள்ளது.

இக்கோயிலிலுள்ள பதினெட்டாம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டில் கங்கப்பனின் மகன் செம்மன் குப்பமன்னு என்பவன் வட்டிலப்பருக்குத் தானம் செய்துள்ளான்.[13] எனவே, இக்கோயில்

பதினெட்டாம் நூற்றாண்டைச் சார்ந்த கோயிலாகும். இக்கோயிலின் நாயக்கர் காலக் கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலை வேலைப்பாடுகளும் இதனையே உறுதிப்படுத்துகின்றன.

**கோயில் அமைப்பு**

வெற்றி வேலப்பர் கோயில் கருவறை, இடைநாழிகை, அர்த்த மண்டபம், மகா மண்டபம், முன் மண்டபம், சிவன் சன்னதி, நவக்கிரக மண்டபம் ஆகியவற்றைக் கொண்ட மேற்கு நோக்கிய கோயிலாகும். இக்கோயில் ஒரேயொரு பிரகாரத்தைக் கொண்ட திராவிட பாணியிலான கோயில். கோயில் மத்தியில் கருவறை, இடைநாழிகை, அர்த்த மண்டபம், மகா மண்டபம், முன்மண்டபம் ஆகியவை ஒரே நேர்க்கோட்டில் ஒன்றன்பின் ஒன்றாக அமைந்துள்ளன. மையக் கோயிலைச் சுற்றி அஷ்டதிக்பாலகர்களுக்கு பலிபீடம் அமைக்கப்பட்டுள்ளது. வடகிழக்கில் நவகிரகங்களுக்கான சிலைகளும் தென்மேற்கில் சிவன் சன்னதியும் உள்ளது. கருவறை, இடைநாழிகை, அர்த்தமண்டபம், சிவன் சன்னதி ஆகியவை நாயக்கர் காலத்தவையாகும். மகாமண்டபம், முன் மண்டபம், நவகிரக மண்டபம், கொடிமரம் ஆகியன தற்காலத்தவையாகும்.

**கருவறை**

கருவறை புறச்சுவரில் உபானம், ஜகதி ஆகியவை தற்காலத்தில் கோயில் புனரமைக்கப்பட்டபோது தரையின் அடியில் புதைந்துள்ளது. தரையின் மீதிருந்து தொடங்கும் பாதபந்த அதிட்டானப் பகுதியில் திரிபட்டைக் குமுதம், கண்டம், மகாபட்டிகை, கண்டம், பத்மம், கம்பு ஆகியவை கிடைமட்டத்தில் அமைந்துள்ளன. அதன் மீதுள்ள சுவர்ப்பகுதியை சதுர வடிவிலான கால்பகுதி, பத்ம பந்தம், கலசம், தாடி, கும்பம், இதழ்கள், பலகை, வீரகண்டம் ஆகிய பகுதிகளைக் கொண்ட பிரம்மகந்த அரைத்தூண்கள் அலங்கரிக்கின்றன. தூணின் தலைப்பு நாயக்கர் கால மரபிலான நீண்ட பூ மொட்டினையுடைய புஷ்பபோதிகைகளாகும்.[14] சுவரின் மையப் பகுதியிலுள்ள மாடக்குழிகளின் வடக்கில் பைரவர், கிழக்கில் பாலதண்டாயுதபாணி, தெற்கில் விநாயகர் சிற்பங்கள் ஆகம விதிமுறைப்படி அணி செய்கின்றன. மாடக்குழிகளின் தலைப்பு சிம்மமுக நாசித் தலைப்பினைக் கொண்ட கொடிக்கருக்கினாலான கூடுகளைக் கொண்டு திகழ்கிறது.

சுவர்ப் பகுதியின்மீது கருவறையை மூடியுள்ள கூரைப்பகுதி எளிமையான உத்திரம், கொடுங்கைகளைக் கொண்டுள்ளது. கொடுங்கைகளை அலங்கரிக்கும் கூடுகளின் நடுப்பகுதியை சிறு கோயில்கள், பத்மம் ஆகியவை அணி செய்கின்றன.

**வெற்றி வேலப்பர்**

கருவறையில் கல்லாலான வெற்றி வேலப்பர் சமபாதத்தில் பாலதண்டாயுதபாணி உருவில் அபிஷேக பீடத்தின்மீது நின்ற நிலையிலுள்ளார். இதைக் காணும் சிலர் வேலப்பர் இலிங்கத்தின்மீது நிற்பதாக தவறுதலாகக் கருதுகின்றனர். இவர் தனது இரு கைகளில் வலது கையில் தண்டத்தைப் பிடித்துள்ளார். இடது கையை ஊரு முத்திரையில் தொடைமீது வைத்துள்ளார். இவரது ருத்திராட்சம் தரித்த தலையும் இடுப்பில் கௌபீனமும், கையில் தண்டமும் சிறு வயதிலேயே முதிர்ச்சி அடைந்ததை உணர்த்துவதாக அமைந்துள்ளது. நெற்றியில் நீண்ட திலகமிடப்பட்டுள்ளது. காதுவரை ஓடிய நீளமான

விழிகள், வில்போன்ற புருவ நெளிவு, புடைத்த மூக்கு, முழு உதடுகள், காதுகளை அலங்கரிக்கும் கோப்பு, வளையங்கள், தலையின் இரு பக்கங்களிலும் விரிந்துள்ள முடிக்கற்றைகள், தோள் மற்றும் கழுத்திலணியப்பட்டுள்ள ஆரம், நீண்டு தொங்கும் ருத்திராட்ச மாலைகள், வயிற்றில் உதரபந்தம், கம்பி வலை போன்ற பாகுவளை, கைவளை மற்றும் கால்களில் வீரக்கழல்கள், சதை பற்றான உடலமைப்பு, சற்றுப் புடைத்த வயிற்றுப் பகுதி ஆகியவை இச்சிற்பம் நாயக்கர் காலத்தவை என்பதை உறுதிப்படுத்துகிறது.[15]

இச்சிற்பத்தைச் சுற்றிக் காணப்படும் உலோகத்தாலான திருவாட்சி வேலைப்பாடுடையதாகும். நாயக்கர் கால துதியாளி தூண் தலைப்பிலிருந்து நீள் வட்ட வடிவில் தீபச்சுடர் கோர்த்த சரம் வெளிவருவது போன்று அமைந்துள்ளது. இதன் தலைப்பில் சிம்மமுக நாசியும் அதன் கீழ் பூக்கள் மலர்ந்துள்ள கொடியும் அணி செய்கின்றன. இச்சிற்பத்தின் வேலைப்பாடுகளையும், திருவாட்சியின் அணி வரிசைகளையும் கொண்டு ஆய்வு செய்வோமேயானால் வெற்றி வேலப்பர் சிற்பம் 18ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது எனலாம். கோயிலிலுள்ள கல்வெட்டும், கட்டடக் கலைக் கூறுபாடுகளும் இதனையே உறுதிப்படுத்துகின்றன.

**இடைநாழிகை**

கருவறையைக் கடந்தபின் இடைநாழிகையை அடையலாம். இடைநாழிகை புறச்சுவர் கருவறைக்கும் அர்த்த மண்டபத்திற்குமிடையே சற்று உள்ளடங்கியுள்ளது. இதன் தெற்குப்புற மாடக்குழியில் சுகாசனத்தில் அமர்ந்துள்ள முனிவரின் திருக்கோலமும், மாடத்தின் தலைப்பின் மத்தியில் மான், மழுவினை ஏந்திய சிவனின் அமர்ந்த கோலமும் காட்டப்பட்டுள்ளது. இதேபோல் வடக்குப் புறச்சுவர் மாடக்குழியில் தவக்கோலத்தில் முனிவரும், மாடத் தலைப்பின் நடுவில் லிங்கத்தின்மீது பால் சொரியும் காராம் பசுவும் அமைந்துள்ளன.

**அர்த்த மண்டபம்**

இடைநாழிகையையடுத்துள்ள அர்த்த மண்டபத்தின் தெற்குப் புறச்சுவர் மாடக்குழியில் மரத்தடியிலுள்ள இலிங்கமும், அதன் மீது மாடக்கூட்டில் கண்ணப்ப நாயனார் திருவுருவமும், வடக்குப் புறச் சுவர் மாடக்குழியில் வலது கையில் தண்டத்துடன் இடது கையைத் தொடையில் வைத்து தாடியுடன் நின்ற கோலத்தில் முனிவரின் சிற்பமும் புடைப்புச் சிற்பங்களாக அமைந்துள்ளன.

கருவறை, இடைநாழிகை, அர்த்த மண்டபத்தின் வெளிப்புறச் சுவர் வேலைப்பாடுகள் ஒரே மாதிரியாக அமைந்துள்ளன. இப்பகுதியின் கொடுங்கை மீதுள்ள சிற்ப அணிவரிசை மிகவும் கவனிக்கத்தக்கது. பொதுவாக கொடுங்கை மீதுள்ள வர்க்கப் பகுதியில் யாளி வரிசை அமையும். ஆனால், இச்சிற்ப அணிவரிசை கொடைக்கானல் பகுதிக்கே உரிய சிறப்பாகும். கொடைக்கானல் பூம்பாறை குழந்தை வேலப்பர் கோயிலிலும் கூரைப்பகுதியில் இத்தகைய சிற்ப அணி வரிசையைக் காணலாம்.

யானையுடன் போர்செய்யும் வீரர்கள், சிற்றின்பச் சிற்பங்கள், குந்து சிம்மங்கள், குதிரை, சிம்மம், வாள் கொண்டு மோதும் போர் வீரர்கள், மான், கேடயம், குதிரை, யானை ஒன்றுடன் ஒன்று மோதும்

காட்சி, குரங்காட்டி, நடனக் கலைஞர், கர்ப்பிணிப் பெண், பணிப்பெண், சிங்கத்துடன் மோதும் வீரன், வாயில் பாம்பினைக் கௌவிய மயில், ஆமை, வில்லில் நாணினைப் பூட்டி அம்பெய்தும் வீரன், போர்வீரர்கள், யாளி, யானை, ஆகிய உருவங்கள் நாயக்கர் கால வாழ்வியலைச் சித்தரிக்கும் வகையில் வரிசையாக அமைந்துள்ளன.

கோயில் அடித்தளம் முதல் கூரையிலுள்ள சிற்ப அணிவரிசை வரையிலுள்ள கட்டடப் பகுதிகள் கருங்கல்லாலானவை. கருவறையின்மீது சுதையாலான வட்ட வடிவ கிரீவம், விருத்த சிகரம், அதன் உச்சியில் உலோகத்தாலான கலசமும் உள்ளது. இத்தகைய விமானம் மிஸ்ரம் எனப்படும். கிரீவத்தின் வேதிகைப் பகுதியில் நான்கு மூலைகளிலும் பூதகணங்களும் அவற்றின் இருபுறமும் மயில்களும் உள்ளன. கிரீவக் கோட்டங்களை கிழக்கில் முருகர், தெற்கில் தெட்சிணாமூர்த்தி, வடக்கில் பிரம்மா, மேற்கில் விஷ்ணு ஆகியோரது சிற்பங்கள் அலங்கரிக்கின்றன.

அர்த்த மண்டபத்தைக் கடந்தால் மகா மண்டபத்தை அடையலாம். இதன் நடுவில் உண்டியலும் அதனையடுத்து முருகரின் வாகனமான மயில் பாம்பினைத் தன் அலகில் கௌவியவாறு மூலவரை நோக்கியுள்ளது. மகாமண்டபம் பாறைக் கற்களைக் கொண்டு கட்டப்பட்ட கல்கட்டடமாகத் திகழ்கிறது. சன்னல்களும், கதவும் மரத்தாலானதாகும். இதன் கூரை தகரத்தினால் ஆனதாகும்.

**முன் மண்டபம்**

மகாமண்டபத்தையடுத்து கோயில் முன்மண்டபம் திறந்த அமைப்பிலானது. அதன் மேற்கூரை தகரத்தாலானது. இதன் முன்புறம் புஷ்பபோதிகை தலைப்பினைக் கொண்ட இரண்டு சதுர வடிவிலான தூண்களும், அதன் இருபுறம் விளக்குத் தூண்களும் நிறுவப்பட்டுள்ளன. மண்டபத்தின் நடுவில் மூலவருக்கு நேர் எதிரே பலிபீடம் அமைந்துள்ளது. மண்டபத்தின் இடதுபுறம் 18ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியிலான கல்வெட்டு நடப்பட்டுள்ளது.

முன் மண்டபத்திற்கும் நுழைவாயிலுக்குமிடையே 23.04.1969இல் அமைக்கப்பட்ட வேல் மற்றும் கொடிமரம் காணப்படுகின்றன. கொடிமரத்தில் கருங்கல்லாலான அடி பீடத்தின் கண்டப்பகுதியில் பூக்கள், விநாயகர், தண்டாயுதபாணி, சிற்றின்ப சிற்பம் மற்றும் தவக்கோலத்திலுள்ள முனிவரின் புடைப்புச் சிற்பம் காணப்படுகிறது.

**சிவன் சன்னதி**

கோயில் பிரகாரத்தின் தென்மேற்கில் வடக்கு திசைநோக்கி சிவன் சன்னதி உள்ளது. இச்சன்னதி கருவறை மற்றும் முன்மண்டபத்தைக் கொண்டுள்ளது. கருவறையில் சிறிய அளவிலான இலிங்கம், அதன் வலதுபுறம் கடம்பனும், இடதுபுறம் இடும்பனும் (முருகனின் காவல் தெய்வங்கள்) நின்றுள்ளனர். கருவறை நுழைவாயில் இருபுறமும் காணப்படும் முன் மண்டப தூண்களின் அடி சதுரப் பகுதியில் துவார பாலகர் சிற்பங்களும், அதன் முன்புறம் வலது பக்கம் நாட்டார் பாணியிலான துர்க்கையும், இடதுபக்கம் விநாயகர் மற்றும் நாகச் சிற்பங்களும் நடுவில் நந்தியும் உள்ளன. முன்மண்டபத்தைத் தாங்கியுள்ள எட்டு சதுரத் தூண்களின் சதுரங்களில் தண்டாயுதபாணி, சேவல், நட்சத்திரம், குதிரையும், தூணின் தலைப்பில் பூ மொட்டுக்களைக் கொண்ட புஷ்ப போதிகையும் காணப்படுகிறது. முன் மண்டப விதானத்தில் அம்புகள்

மோதும் காட்சி, இரண்டு மீன்கள் கிடைமட்டத்தில் ஒன்றையொன்று நோக்கியதாக உள்ளது. இதன் கூரைப்பகுதியில் யாளிகள், பாம்பினைக் கௌவிய மயில், இரண்டு தலைப் பறவை (கண்ட பேரண்ட பறவை), கொடி கருக்குகள், மீன், சிற்றின்பச் சிற்பம், யானை, பூ பதக்கம் ஆகியன அமைந்துள்ளன. நாயக்க மன்னர் காலத்தில் கண்ட பேரண்ட பறவை பலம் வாய்ந்த பறவை போல சித்திரிக்கப்பட்டிருக்கும்.[16] கருவறையின் கூரைப்பகுதியில் யாளிகள், குதிரை வீரன், நந்தி, பெண் தலை, இறக்கைகள், விலங்கு உடல் கொண்ட புருஷாமிருகம், தீப சுடருடன் இலிங்கம், யாளிகள் போரிடும் காட்சி, மீன், யானை, புல்லாங்குழல் வாசிக்கும் கிருஷ்ணர், இளம் கன்று, அடியவர், சேவல் ஆகியன உள்ளன.

நாயக்கர் கால ஆட்சியமைப்பு பல பாளையங்களாகப் பிரிக்கப்பட்டமையால் ஒற்றுமையின்மை காணப்பட்டது. வரிச்சுமையாலும் பஞ்சங்களாலும் மைய அரசு வலுவற்றதாகி தொடர்ந்து போராட்டக் காலமாகவே இருந்துள்ளது. இத்தகைய சூழல்களின் காரணமாகவே மிகப்பெரிய படையினை நிர்வகிக்க வேண்டிய தேவை இருந்துள்ளது. சமுதாய ஒழுங்கு சீர்குலைந்து அற மதிப்புகளை இழந்தது. அரசர்களும் மக்களும் சிற்றின்பத்தில் மூழ்கினர். போகம் துய்த்தல் சமூக நலன் நோக்கிய சமயச் சடங்காகவே கருதப்பட்டது. இதன் காரணமாக அக்காலக் கோயில் சிற்பங்களில் சிற்றின்பச் சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன. தமிழ்நாட்டுச் சிற்பக்கலை வரலாற்றில் நாயக்கர் காலம் சிற்றின்பக் காலம் என அழைக்கப்படுவது இங்கு நோக்குதற்குரியது.[17]

விலங்குகள் மோதும் காட்சி, வீரர்கள் போரிடும் காட்சி எனப் போர்ப்பண்பு நாயக்கர் காலக் கலைகளில் முனைப்புற்றுத் தென்படும் கூறுபாடுகளாகும்.[18] தமிழ்நாட்டுச் சிற்பக் கலை வரலாற்றில் முன்னில்லாத புதுமையொன்றினை நாயக்கர் காலத்தில் காணவியலுகிறது. அது கர்ப்பிணிப் பெண் போன்ற சிற்பங்களாகும். நாயக்கர் கால கலைப் போக்குகளில் அக்கால சிற்பங்கள் அரசியல், சமுதாய, பொருளாதார, சமயம் மற்றும் பண்பாட்டு சூழ்நிலைக்கேற்ப இருந்துள்ளமையை உணர முடிகிறது.

இத்தகைய சிற்பங்கள் அவை சார்ந்த காலத்தில் போர்கள் இடைவிடாமல் நடைபெற்றமையையும், இனப்பெருக்கத்தின் அவசியத்தையும், சிற்றின்பத்தைக் கடந்தால் பேரின்பத்தை அடையலாம் என்ற தத்துவத்தையும் வருங்கால சந்ததியினர் அறியும் வகையில் சான்றுகளாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**பூசை மற்றும் வழிபாடு**

வில்பட்டி வெற்றி வேலப்பர் கோயில் நடைத்திறப்பு காலை 6 மணிக்கும், நடையடைப்பு இரவு 7 மணிக்கும் நடைபெறும். ஒரு நாளைக்கு காலை, பகல் (உச்சிக்காலம்), மாலை என மூன்று கால பூசைகள் நடைபெறும். காலையில் பிரம்மச்சாரியான வெற்றி வேலப்பருக்கு அபிஷேகமும், பழமும், பகலில் பொங்கல் நெய்வேத்தியமும், மாலையில் பழமும் படைக்கப்படுகிறது. 2014ஆம் ஆண்டு வில்பட்டி ஆன்மிக பெருமக்கள் முயற்சியால் மகாகும்பாபிஷேகம் வெகுசிறப்பாக நடைபெற்றது. இக்கோயிலுக்குரிய நிலங்கள் வில்பட்டி, பெரியகுளம் ஆகிய ஊர்களில் இருப்பதாகக் கூறப்படுகிறது.



tamilmanam

ஆண்டுதோறும் பங்குனி மாதம் கோயில் திருவிழா கொண்டாடப்பட்டு வருகிறது. இக்கோயில் பழநி தேவஸ்தானம் நிர்வாகத்திற்குட்பட்ட கோயிலாகும்.

மாடங்களின் அளவைவிட சிறிய அளவிலான மாடச்சிற்பங்கள், தூண்களை அலங்கரிக்கும் பூ மொட்டுகளுடன் கூடிய புஷ்பபோதிகை, மாடங்களின் தலைப்பில் கொடிக்கருக்கு, சிற்றுருவ சிற்பங்கள், சிம்மமுக நாசி, கூரைப் பகுதிக்கும் கிரீவப் பகுதிக்கும் இடையிலான சிற்ப அணிவரிசை, சிற்றின்பச் சிற்பங்கள், கண்டபேரண்ட பறவை, தவக்கோலத்திலுள்ள முனிவர் சிற்பங்கள் ஆகியவை நாயக்கர் கால கலைக்கூறுகளாகும்.

**முடிவுரை**

கொடைக்கானல் வில்பட்டி வெற்றி வேலப்பர் கோயில் நாயக்கர் கால பிற்காலத்தைச் சார்ந்ததாகும் என்பது இவ் ஆய்வின் மூலம் புலப்படும் உண்மையாகும். இக்கோயில் சுமார் இருநூறு ஆண்டுகால வரலாற்றினைத் தன்னகத்தே கொண்ட கோயிலாகும். மதுரை நாயக்கர் கலைப்பாணியில் இக்கோயில் காட்டப்பட்டுள்ளது. வெற்றி வேலப்பர் கோயில் ஆங்கிலேயர் வருகைக்கு முன்னர் வில்பட்டியில் மக்கள் வாழ்ந்துள்ளமைக்கு மிகச்சிறந்த சான்றாகத் திகழ்கின்றது. இத்தகைய வரலாற்றுத் தடங்களைப் போற்றிக் காக்க வேண்டியது நமது கடமை.

**சான்றெண் விளக்கம்**


1. ஜீ.ச. முரளி, **தமிழகச் சிவத்தலங்கள்**, சதுரா பதிப்பகம், சென்னை, 2000, ப. 528.
2. ம. இராசசேகர தங்கமணி, **தொல்லியல்**, கொங்கு பதிப்பகம், கரூர், 2002, ப. 57.
3. **புறநானூறு**, பா. 205.
4. தமிழ்நாட்டு வரலாற்றுக்குழு, **தமிழ்நாடு – சங்க காலம் (அரசியல்)**, தமிழ்நாட்டு வரலாற்று வெளியீட்டகம், சென்னை, ப. 472.
5. **புறநானூறு**, பா. 205:6, **அகநானூறு**, 13:10–11.
6. தமிழ்நாட்டு வரலாற்றுக்குழு, **மு.கா.நூல்**, பக். 461–463.
7. **தொல்காப்பியம்**, செய்யுள் – 161, **யாப்பருங்கல விருத்தியுரை**, செய்யுள் – 2.
8. சீதாராம் குருமூர்த்தி, **திண்டுக்கல் மாவட்டத் தொல்லியல் கையேடு**, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை, 2007, பக். 51–52.
9. **மேலது**, பக். 9–20.
10. **மேலது**, பக். 51–52.
11. **மேலது**, ப. 54
12. **இலக்கண விளக்கம்** – அகத்திணையியல், ப. 38, **தொல்காப்பியம்,** அகம் – 13.
13. **A.R.E.,** 371 of 1985 – 86.
14. கோ. தங்கவேலு, **இந்தியக் கலை வரலாறு,** முதல் புத்தகம், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1976, ப. 532.
15. ஏ. ஏகாம்பரநாதன், **தமிழகச் சிற்ப, ஓவியக் கலைகள்,** திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்., சென்னை, 1984, பக். 122 – 125.
16. த. சந்திரகுமார், **நன்மணி மாடம் – விசயநகர நாயக்கர் காலம்,** சிந்தைக்கினிய சிற்பக்கலை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1995, ப. 165.
17. ரா. பாலுசாமி, **நாயக்கர் காலக் கலைக்கோட்பாடுகள்,** காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2013, ப. 168. பக். 177–185.

## References:


1. Murali, G. S. *Tamilaga Sivathalangal* (Shiva Temples of Tamil Nadu). Chathura Pathippagam, 2000, p. 528.
2. Thangamani, M. Rajasekara. *Tholliyul* (Archaeology). Kongu Pathippagam, 2002, p. 57.
3. *Purananuru*. Verse 205.
4. Tamil Nadu History Committee. *Tamil Nadu – Sangam Period (Politics)*. Tamil Nadu History Publications, p. 472.
5. *Purananuru*. Verse 205:6; *Akananuru*. Verse 13:10–11.
6. Tamil Nadu History Committee. *Op. Cit.*, pp. 461–463.
7. *Tolkappiyam*. Seyyul 161; *Yapparungala Viruthiyurai*. Seyyul 2.
8. Gurumurthy, Sitaram. *Archaeological Guide of Dindigul District*. Tamil Nadu State Department of Archaeology, 2007, pp. 51–52.
9. Gurumurthy, Sitaram. *Archaeological Guide of Dindigul District*. pp. 9–20.
10. Gurumurthy, Sitaram. *Archaeological Guide of Dindigul District*. pp. 51–52.
11. Gurumurthy, Sitaram. *Archaeological Guide of Dindigul District*. p. 54.
12. *Ilakkana Vilakkam – Akathinaiyiyal*. p. 38; *Tolkappiyam*. Akam 13.
13. *Annual Report on Epigraphy (A.R.E.)*. No. 371 of 1985–86.
14. Thangavelu, G. *History of Indian Art (Book I)*. Tamil Nadu Textbook Corporation, 1976, p. 532.
15. Ekambaranathan, A. *Sculpture and Painting Arts of Tamil Nadu*. South India Saiva Siddhanta Works Publishing Society Ltd., 1984, pp. 122–125.
16. Chandrakumar, T. *Nanmani Maadam – Vijayanagara Nayaka Period: Thoughtful Sculpture Art*. Tamil University, 1995, p. 165.
17. Balusamy, Ra. *Art Principles of the Nayak Period*. Kalachuvadu Pathippagam, 2013, p. 168.
18. Balusamy, Ra. *Art Principles of the Nayak Period*. pp. 177–185.



**Copyright Holder:**
© Author(s) (2026).
**First Publication Right:**
© Tamilmanam International Research Journal of Tamil Studies
**This article is under:**


Tamilmanam